# NSW HEALTH

## COVID-19 Key Points – Wednesday 18 August 2021

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில் 633 புதிய கோவிட் -19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர்.
- கவலைக்கிடமாக, கடந்த இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், கோவிட்-19ஆல் பாதிக்கப்பட்டிருந்த மூன்று பேரின் இறப்புக் குறித்து நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்க்கு (NSW Health) அறிவிக்கப்பட்டுள்ளது.
- பேசைட் (Bayside), பிளாக்டவுண் (Blacktown), பேர்வூட் (Burwood), காம்பெல்டவுன் (Campbelltown), கான்டர்பெரி-பாங்க்ஸ்டவுன் (Canterbury-Bankstown), கம்பலான்ட் (Cumberland), ஃபேர்ஃபீல்ட் (Fairfield), ஜோர்ஜஸ் றிவர் (Georges River), லிவர்பூல் (Liverpool), பரமட்டா (Parramatta), பென்றித் (Penrith) மற்றும் ஸ்ரத்ஃவீல்ட் (Strathfield) ஆகிய இடங்களில் வசிக்கும் 16-39 வயதான அனைவரும், முந்துரிமை ஃபைசர் (Pfizer) தடுப்பூசிக்கான முன்பதிவுகளை இப்போது பெற்றுக்கொள்ளலாம். ஒரு முன்பதிவினை மேற்கொள்ள, இங்கே செல்லவும்: Priority COVID-19 vaccination booking for 16 to 39 year-olds | NSW Government
- தடுப்பூசி பெற்றுக்கொள்வோரின் எண்ணிக்கையை எம்மால் இயன்றளவு அதிகரிக்கவேண்டியிருக்கிறது, ஆனால் நாம் ஏனையோருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதைத் தவிர்க்க முயற்சிக்கவேண்டியும் இருக்கிறது. வீட்டிலேயே இருக்கவும் அத்துடன் விருந்தினர்களை வரவேற்கவேண்டாம்.
- குறிப்பாக, மெர்ரிலாண்ட்ஸ் (Merrylands), கில்ட்ஃபோர்ட் (Guildford), ஓபன் (Auburn), கிரீனேக்கர் (Greenacre), யகூனா (Yagoona), செயின்ட் மேரீஸ் (St Marys) மற்றும் ஸ்ரத்ஃவீல்ட் (Strathfield) ஆகிய புறநகர்களைப் பற்றி நாம் கவலைகொண்டுள்ளோம்.
- நோய்த்தொற்றுள்ள ஒவ்வொருவரும், நோய்க்கிருமியை ஒன்றிற்கு மேற்பட்ட நபர்களுக்குக் கடத்துகிறார்கள். மற்றைய நோய்க்கிருமியின் மாற்றுவடிவங்களைவிடவும், டெல்டா மாற்றுவடிவ நோய்க்கிருமியானது ஏறத்தாழ இரண்டு மடங்கு நோய்த்தொற்றுக்களைத் தோற்றுவிக்கிறது.
- எம்மால் இதைக் கடந்துசெல்ல முடியும், ஆனால் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும் என நாங்கள் வேண்டுகிறோம்.

Translated By WSLHD Translation Service, 18 August 2021
Tamil